AXIS BANK

# ஆக்ஸிஸ் வங்கி விமான நிலைய லவுஞ்ச் அணுகல் திட்டம்

**1. செட் ஏ -க்கான பங்கேற்பு லவுஞ்ச்கள்**

**செட் ஏ -இன் கீழ் தகுதியுடைய கார்டுகள்:**

- ஆக்ஸிஸ் வங்கி மை ஸோன் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு ஒரு இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி பிரைடு சிக்னேச்சர் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி அட்வான்டேஜ் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி மை விங்ஸ் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு ஒரு இலவச லவுஞ்ச் அணுகல்)
- பிளிப்கார்ட் ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டு (வருடத்திற்கு 4 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி ஏஸ் கிரெடிட் கார்டு (வருடத்திற்கு 4 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஏர்டெல் ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 4 இலவச லவுஞ்ச் அணுகல்)

| வ. எண் | நகரம் | லவுஞ்ச் | முனையம் |
|---|---|---|---|
| 1 | பெங்களூரு | டிஎஃப்ப்எஸ் | உள்நாட்டு முனையம் |
| 2 | பெங்களூரு | டிஎஃப்ப்எஸ் | சர்வதேச முனையம் |
| 3 | சென்னை | டிஎஃப்ப்எஸ் டிராவல் கிளப் | உள்நாட்டு முனையம் |
| 4 | சென்னை | டிஎஃப்ப்எஸ் டிராவல் கிளப் | உள்நாட்டு முனையம் |
| 5 | டெல்லி | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் டி2 |
| 6 | டெல்லி | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் டி3 |
| 7 | டெல்லி | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் டி3 |

| | | | |
|---|---|---|---|
| 8 | ஹைதராபாத் | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் |
| 9 | ஹைதராபாத் | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் |
| 10 | கொல்கொத்தா | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | உள்நாட்டு முனையம் |
| 11 | கொல்கொத்தா | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | சர்வதேச முனையம் |
| 12 | மும்பை | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் டி2 |
| 13 | மும்பை | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் டி1சி |
| 14 | புனே | பேர்ட் குழுமம் | உள்நாட்டு முனையம் |

**2. செட் பி -க்கான பங்கேற்பு லவுஞ்ச்கள்**

**செட் பி -இன் கீழ் தகுதியுடைய கார்டுகள்:**

- ஆக்ஸிஸ் வங்கி பிரிவில்லேஜ் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி விஸ்டாரா கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி சிக்னேச்சர் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி இன்ஃபினைட் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி வெல்த் சிக்னேச்சர் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி அஃப்லியன்ட் சிக்னேச்சர் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி சிக்னேச்சர் பிரீமியர் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)

| வ. எண் | நகரம் | லவுஞ்ச் | முனையம் |
|---|---|---|---|
| 1 | அஹமதாபாத் | தி லவுஞ்ச் | உள்நாட்டு முனையம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | பெங்களூரு | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் |
| 3 | பெங்களூரு | டிஎஃப்எஸ் | சர்வதேச முனையம் |
| 4 | சண்டிகர் | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் |
| 5 | சென்னை | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | உள்நாட்டு முனையம் |
| 6 | சென்னை | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | புதிய சர்வதேச முனையம் |
| 7 | கொச்சின் | கேஃப்ஸ் எர்த் | உள்நாட்டு முனையம் |
| 8 | கொச்சின் | கேஃப்ஸ் எர்த் | சர்வதேச முனையம் |
| 9 | டெல்லி | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் டி2 |
| 10 | டெல்லி | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் டி3 |
| 11 | டெல்லி | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் டி3எல்4 |
| 12 | டெல்லி | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் டி3 எல்7 |
| 13 | கோவா | டிஎஃப்எஸ் குட் டைம்ஸ் | உள்நாட்டு முனையம் |
| 14 | ஹைதராபாத் | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் |
| 15 | ஹைதராபாத் | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் |
| 16 | கொல்கத்தா | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | உள்நாட்டு முனையம் |
| 17 | கொல்கத்தா | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | சர்வதேச முனையம் |
| 18 | மும்பை | ஓபராய் கிளிப்பர் | சர்வதேச முனையம் டி2 |
| 19 | மும்பை | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் டி2 |

| | | | |
|---|---|---|---|
| 20 | நாக்பூர் | டிஎஃப்எஸ் மாண்டரின் | உள்நாட்டு முனையம் |
| 21 | புனே | பேர்ட் குழுமம் | உள்நாட்டு முனையம் |
| 22 | வதோதரா | சப்தரிஷி பிரீமியம் | உள்நாட்டு முனையம் |

**3. செட் சி -க்கான பங்கேற்பு லவுஞ்ச்கள் செட்**

**செட் சி -இன் கீழ் தகுதியுடைய கார்டுகள்:**

- ஆக்ஸிஸ் வங்கி மைல்ஸ் & மோர் வேர்ல்டு கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 4 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி மைல்ஸ் & மோர் வேர்ல்டு செலெக்ட் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 8 இலவச அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி மேக்னஸ் கிரெடிட் கார்டு (வரம்பற்ற இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி செலெக்ட் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி விஸ்டாரா சிக்னேச்சர் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி விஸ்டாரா இன்ஃபினைட் கிரெடிட் கார்டு (ஒரு காலாண்டிற்கு 2 இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி ரிசர்வ் கிரெடிட் கார்டு (வரம்பற்ற இலவச லவுஞ்ச் அணுகல்)
- ஆக்ஸிஸ் வங்கி பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டு (வரம்பற்ற இலவச லவுஞ்ச் அணுகல்)

| வ,எண் | நகரம் | லவுஞ்ச் | முனையம் |
|---|---|---|---|
| 1 | அஹமதாபாத் | தி லவுஞ்ச் | உள்நாட்டு முனையம் |
| 2 | பெங்களூரு | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் |
| 3 | பெங்களூரு | டிஎஃப்எஸ் | சர்வதேச முனையம் |
| 4 | புவனேஷ்வர் | பேர்டு குழுமம் | உள்நாட்டு முனையம் |
| 5 | சண்டிகர் | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் |
| 6 | சென்னை | டிஎஃப்எஸ் டிராவல் | உள்நாட்டு முனையம் |

| | | | |
|---|---|---|---|
| | | கிளப் | |
| 7 | சென்னை | டிஎஃப்எஸ் டிராவல் கிளப் | சர்வதேச முனையம் புதிது |
| 8 | கொச்சின் | கேஃப்ஸ் எர்த் | உள்நாட்டு முனையம் |
| 9 | கொச்சின் | கேஃப்ஸ் எர்த் | சர்வதேச முனையம் |
| 10 | கோயம்புத்தூர் | டிஎஃப் பிளாக்பெர்ரி | உள்நாட்டு முனையம் |
| 11 | டேராடூன் | பேர்டு குழுமம் | உள்நாட்டு முனையம் |
| 12 | டெல்லி | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் டி2 |
| 13 | டெல்லி | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் டி3 |
| 14 | டெல்லி | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் டி3 எல்4 |
| 15 | டெல்லி | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் டி3 எல்7 |
| 16 | கோவா | டிஎஃப்எஸ் குட் டைம்ஸ் | உள்நாட்டு முனையம் |
| 17 | ஹைதராபாத் | பிளாசா பிரீமியம் | உள்நாட்டு முனையம் |
| 18 | ஹைதராபாத் | பிளாசா பிரீமியம் | சர்வதேச முனையம் |
| 19 | கொல்கத்தா | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் |
| 20 | கொல்கத்தா | டிஎஃப்எஸ் | சர்வதேச முனையம் |
| 21 | லக்னோ | டிஎஃப் தி லவுஞ்ச் | உள்நாட்டு முனையம் |
| 22 | மும்பை | ஓபராய் கிளிப்பர் | சர்வதேச முனையம் டி2 |
| 23 | மும்பை | டிஎஃப்எஸ் | உள்நாட்டு முனையம் டி2 |
| 24 | நாக்பூர் | டிஎஃப்எஸ் மாண்டரின் | உள்நாட்டு முனையம் |
| 25 | புனே | பேர்டு குழுமம் | உள்நாட்டு முனையம் |
| 26 | புனே | கேஃப்ஸ் எர்த் | உள்நாட்டு முனையம் |

| | | | |
|---|---|---|---|
| 27 | வதோதரா | சப்தரிஷி பிரீமியம் | உள்நாட்டு முனையம் |

**சொற்களஞ்சியம்:**

இந்தத் திட்டத்தின் கீழ் "தகுதியுடைய கார்டு" என்பது மேலே குறிப்பிடப்பட்டுள்ள விசா அல்லது மாஸ்டர்கார்டு நெட்வொர்க் பிளாட்ஃபார்ம்களில் ஆக்ஸிஸ் வங்கி வழங்கிய பின்வரும் கார்டு வகைகளைக் குறிக்கிறது.

"தகுதியுடைய கார்டுதாரர்" என்பது தகுதியுடைய கிரெடிட் கார்டை வைத்திருப்பவரைக் குறிக்கிறது.

பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்கள்" என்பது மேலே காண்பிக்கப்பட்டுள்ளவாறு இந்தத் திட்டத்தில் பங்கேற்கின்ற விமான நிலைய லவுஞ்ச்களின் பட்டியலைக் குறிக்கிறது.

**இந்தத் திட்டத்தின் கீழ் அணுகுவதற்கான விதிகள்**

- இந்தத் திட்டமானது ஆகஸ்ட் 31, 2025 வரை கிடைக்கும்
- பின்வரும் நுழைவு வகைகளில் ஒன்றின் அடிப்படையில் தகுதியுடைய கார்டுதாரர்கள், இந்தத் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் அனைத்து விமான நிலைய லவுஞ்ச்களையும் அணுகுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்:
    - நுழைவு வகை 1: தகுதியுடைய கார்டுதாரருக்கு மட்டுமே இலவச நுழைவு, (விசாவிற்கு ரூ. 2 மற்றும் மாஸ்டர்கார்டுக்கு ரூ. 25 என்ற சிறிய அளவிலான ஸ்வைப் கட்டணத்திற்கு உட்பட்டது). தகுதியுடைய கார்டுகள் அனைத்தையும் சிறிய அளவிலான ஒரு கட்டணத்தில் பரிவர்த்தனையை ஸ்வைப் செய்வதன் மூலம் நுழைவாயிலில் சரிபார்க்கப்பட வேண்டும்.
    - நுழைவு வகை 2: பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்களில், தனக்கு மட்டுமே அல்லது தன்னுடன் வைத்திருக்கும் விருந்தினர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பயன்படுத்துவதற்கான கட்டணங்களுக்கேற்ப, தகுதியுடைய கார்டுதாரருக்கான கட்டணம் செலுத்துகின்ற நுழைவு (தகுதியுடைய கார்டுதாரரால் கட்டணம் நேரடியாகப் பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சில் செலுத்தப்படும்.).
- இந்தச் சலுகையை மற்றொருவருக்கு மாற்ற இயலாது, மாற்றத்தக்கதல்ல மற்றும் பணமாக்க முடியாது.
- பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சைப் பயன்படுத்துவதற்கு, நுழைவாயிலில் விசாவிற்கு ரூ. 2 மற்றும் மாஸ்டர்கார்டுக்கு ரூ. 25 என்ற ஒரு சிறிய அளவிலான பரிவர்த்தனையை ஸ்வைப் செய்வதன் மூலம் வாடிக்கையாளரின் கார்டை சரிபார்க்க வேண்டும்.இந்த ஸ்வைப்

செய்வதில் கார்டு ஆதண்டிகேஷன் தோல்வியடைந்தால் வாடிக்கையாளருக்கு இலவச நுழைவு மறுக்கப்படும்.

- மேற்கூறிய பத்திகளுக்கு முரண்பாடு இல்லாமல், பின்வரும் சூழ்நிலைகளில் நுழைவு வகை 1 கட்டுப்படுத்தப்படலாம் அல்லது கிடைக்காமல் போகலாம்:
    - ➢ ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட மற்றும் முழுமையான சுய விருப்பத்தின் பேரில் ஏதேனும் ஒரு காரணத்திற்காக நுழைவு வகை 1 ஐ (ஒரு திட்டமாகவோ அல்லது ஏதேனும் தகுதியுடைய கார்டுதாரருடன் அல்லது ஏதேனும் பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சில்) திரும்பப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில்; அல்லது
    - ➢ ஆக்ஸிஸ் வங்கியின் கார்டுதாரர்களுக்கான அதிகபட்ச அளவு அல்லது தகுதியுடைய கார்டு வகை அல்லது ஆக்ஸிஸ் வங்கி வழங்கியுள்ள தகுதியுடைய கார்டு வகையானது சம்பந்தப்பட்ட பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சின் அதிகபட்ச வரம்பை எட்டியிருக்கும் பட்சத்தில். இதற்காக ஆக்ஸிஸ் வங்கி வழங்கியுள்ள வெவ்வேறு வகையான தகுதியுடைய கார்டு வகைகளுக்கு, பங்கேற்பு விமான நிலைய லவுஞ்சுக்கான அணுகல் வேறுபடலாம் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு அணுகல் கிடைக்காத எந்த சூழ்நிலையிலும், அதற்கு ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பேற்காது
    - ➢ இந்தத் திட்டத்தின் கீழ் தகுதியுடைய கார்டுதாரருக்கு ஏதேனும் சலுகைகள், நன்மைகள் அல்லது வசதிகள் கிடைக்கும் என்றோ அல்லது பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச் மூலம் ஏற்பாடு செய்யப்படும் என்றோ ஆக்ஸிஸ் வங்கி எந்த உத்திரவாதமும் அளிக்கவில்லை, அதற்காக ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பேற்காது. குறிப்பாக, ஏதேனும் சிஸ்டம் செயலிழப்பு அல்லது இணைப்புச் சிக்கல்கள் காரணமாக, பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சில் உள்ள சரிபார்ப்பு அமைப்பால் வாடிக்கையாளர்களின் கார்டை ஸ்வைப் செய்து, அங்கீகரிக்க முடியாத பட்சத்தில், வாடிக்கையாளர்(களுக்கு) இலவச லவுஞ்ச் அணுகல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படலாம்.
- இந்தத் திட்டத்தின் கீழ் பங்கேற்கின்ற விமான நிலைய லவுஞ்ச்களின் பயன்பாடு (நுழைவு வகை 1 மற்றும் நுழைவு வகை 2 ஆகிய இரண்டின் கீழும்) என்பது, ஒவ்வொரு காலாண்டிலும் ஆக்ஸிஸ் வங்கி தனது சுய விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கின்ற அணுகல் வரம்புகள் /ஒதுக்கீட்டிற்கு உட்பட்டதாகும். அந்த வரம்புகள்/ஒதுக்கீடுகளைத் தாண்டி, பயன்படுத்துவதற்கு ஏதேனும் முயற்சி செய்யப்பட்டால், அது

அந்த பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சால் நிராகரிக்கப்படும்.

- வேறுவிதமாகக் குறிப்பிடப்படாத பட்சத்தில், உடன் வந்திருக்கும் அனைத்து குழந்தைகளும் (அனுமதிக்கப்பட்ட இடங்களில்) முழுமையான விருந்தினர் கட்டணத்திற்கு உட்பட்டதவர்களாக இருப்பார்கள்.
- உணவு/சாப்பாடு/அருந்துகின்ற பானப் பொருட்களுக்கு (குறிப்பாக, மதுபானங்கள்) மற்றும் சிறு தூக்கம், மசாஜ் சேவை மற்றும் ஸ்பா போன்ற சேவைகளுக்கு பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சின் விருப்பத்திற்கேற்ப கூடுதல் கட்டணம் விதிக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் லவுஞ்ச்சைப் பயன்படுத்தும் தகுதியுடைய கார்டுதாரர்கள் அனைவரும் தங்களுடைய தகுதியுடைய கார்டை (விசாவிற்கு ரூ. 2 மற்றும் மாஸ்டர்கார்டுக்கு ரூ. 25 என்ற சிறிய அளவிலான ஸ்வைப் கட்டணத்துடன்) ஸ்வைப் செய்வதை உறுதிசெய்வது பங்கேற்கும் ஏர்போர்ட் லவுஞ்ச் ஊழியர்களின் பொறுப்பாகும், அவர்களின் கார்டை ஸ்வைப் செய்து, தகுதியுடைய கார்டுதாரருக்கு ஒரு கட்டணச் சீட்டை அவர்கள் வழங்குவார்கள்.
- பங்கேற்கும் ஏர்போர்ட் லவுஞ்ச் ஆபரேட்டரால் வழங்கப்பட்ட கட்டணச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில் தகுதியுடைய கார்டுதாரர்களுடைய தகுதியுடைய கார்டில் அவர்களுக்குக் கட்டணம் விதிக்கப்படும். தகுதியுடைய கார்டை ஸ்வைப் செய்வதன் மூலம் செல்லத்தக்க ஒரு கட்டணச் சீட்டை உருவாக்கி, அச்சிடப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியது பங்கேற்பு ஏர்போர்ட் லவுஞ்ச் பணியாளர்களின் பொறுப்பாக இருக்கின்ற அதே நேரத்தில், லவுஞ்ச் வசதிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு, அவரது நுழைவு மற்றும் அவரது துணையின் நுழைவுக்கு (பொருந்துகின்ற பட்சத்தில்) பொருந்துகின்ற சரியான பயன்பாட்டுக் கட்டணம் கட்டணச் சீட்டில் சரியாக இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியது தகுதியுடைய கார்டுதாரரின் பொறுப்பாகும். சரிபார்க்கும் நோக்கங்களுக்காக தகுதியுடைய கார்டுதாரர், கட்டணச் சீட்டின் 'கார்டுதாரரின்' நகலைத் வாங்கித் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டும், மேலும் கட்டணச் சீட்டைச் சரிபார்க்காமல் கட்டணங்களில் தவறு உள்ளதாகக் கூறப்படும் எந்தக் குற்றச்சாட்டும் ஏற்றுக் கொள்ளப்படாது.

- திட்டத்தின் கீழ் பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்களின் அனைத்துப் பயன்பாடுகளும் தகுதியுடைய கார்டை அளிப்பதன் பேரிலான

நிபந்தனைக்குட்பட்டது, மேலும் ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட மற்றும் முழுமையான சுய விருப்பத்திற்கேற்ப, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி எந்த நேரத்திலும், எந்தவொரு கிரெடிட் கார்டு அல்லது திட்டப் பலன்களின் தகுதியை மாற்றலாம், ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம். .

- இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற சலுகைகளை ஒரு தனித்துவமான சலுகையாகக் கருத வேண்டும், இவற்றை ஒன்றுடன் ஒன்று இணைக்க முடியாது மற்றும்/அல்லது எந்த விதத்திலும் அல்லது எந்த வடிவத்திலும் பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சின் மற்ற சலுகைகளுடன் இணைக்க முடியாது. சந்தேகம் எழுவதைத் தவிர்ப்பதற்காக, இந்தத் திட்டத்தின் கீழ் கிடைக்கின்ற சலுகைகளைப் பணமாக மாற்றவோ அல்லது ரெடீம் செய்யவோ முடியாது.
    - பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்கள் அனைத்தும் ஆக்ஸிஸ் வங்கிக்கு சொந்தமானவையோ அல்லது அதனால் இயக்கப்படுபவையோ அல்ல, அவை மூன்றாம் தரப்பு நிறுவனங்களால் இயக்கப்படுபவையாகும். தகுதியுடைய கார்டுதாரர்களும், அவருடன் வரும் விருந்தினர்களும் ஒவ்வொரு பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சின் விதிகள் மற்றும் கொள்கைகளுக்குக் கட்டுப்பட வேண்டும். அவற்றுள் சில பின்வருமாறு: இடத் தட்டுப்பாடு உள்ள லவுஞ்ச்சில் அல்லது தகுதியுடைய கார்டு வகை அல்லது ஆக்ஸிஸ் வங்கியால் வழங்கப்பட்டுள்ள தகுதியுடைய கார்டு வகையானது சம்பந்தப்பட்ட விமான நிலைய லவுஞ்ச்சுக்கான அதிகபட்ச அணுகல் வரம்பை எட்டியிருக்கும் பட்சத்தில் அணுகல் மறுக்கப்படும்.
    - பயனாளிகளும், அவர்களுடைய விருந்தினர்களும் (குழந்தைகள் உட்பட) முறையான மற்றும் சரியான முறையில் நடந்துகொள்வதற்கும், ஆடை அணிவதற்கும் (அமெரிக்காவிற்கு வெளியே அரைக்கால் சட்டைக்கு அனுமதி இல்லை) உட்பட்டது.
    - பிற பயனாளிகளின் சௌகரியத்திற்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு கைக்குழந்தைகள் அல்லது குழந்தைகளைக் லவுஞ்சை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். தகுதியுடைய கார்டுதாரர்கள், விதிகள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்காத பட்சத்தில், நுழைவு மறுக்கப்படலாம் மற்றும்/அல்லது வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப்படலாம் என்பதை ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்கிறார்கள், மேலும் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஆக்ஸிஸ் வங்கிக்கு எதிராக

எந்தப் புகாரும் செய்ய மாட்டார்கள் அல்லது வங்கியைப் பொறுப்பாக்க மாட்டார்கள்.

- சந்தேகம் எழுவதைத் தவிர்ப்பதற்காக, தகுதியுடைய கார்டுதாரருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஏதேனும் சலுகைகள், நன்மைகள் அல்லது வசதிகள் கிடைக்கும் என்றோ அல்லது பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச் மூலம் ஏற்பாடு செய்யப்படும் என்றோ ஆக்ஸிஸ் வாங்கி எந்தவொரு உத்தரவாதமும் அளிக்கவில்லை. திட்டத்தின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்ட நன்மைகள் மற்றும் வசதிகள் எதையேனும் வழங்குவது அல்லது வழங்காமல் இருப்பது (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) தொடர்புடைய எந்த விதமான சூழ்நிலைகள் எதுவாயினும் ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பேற்காது.
- கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக, பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்களுக்கு அதிகபட்ச தங்கும் கொள்கையை (பொதுவாக 2 அல்லது 3 மணிநேரம்) செயல்படுத்துவதற்கான உரிமை இருக்கலாம். இது நீட்டிக்கப்பட்ட தங்குதலுக்கு கட்டணம் விதிக்கக் கூடிய குறிப்பிட்ட தனி லவுஞ்ச் ஆப்ரேட்டரின் சுயாதீன விருப்பத்திற்குட்பட்டதாகும்.
- பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்களுக்கு விமானங்கள் குறித்த விவரங்களை அறிவிக்கின்ற, விருந்தினர்களுக்கு அவர்களின் விமானம் ஏறும் நேரத்தை நினைவூட்டுகின்ற எந்தவொரு ஒப்பந்தக் கடமையும் இல்லை, மேலும் தகுதியுடைய கார்டுதாரர்களின் விமான டிக்கெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விமானம் ஏறும் நேரத்தைக் கடைப்பிடிப்பதற்கு அவர்கள் மட்டுமே பொறுப்பாவார்கள். அதற்கேற்ப, சந்தேகம் எழுவதைத் தவிர்ப்பதற்காக, தகுதியுடைய கார்டுதாரர் (எந்தவொரு காரணத்திற்காகவும்) விமானங்களில் ஏறத் தவறுகின்ற பட்சத்தில், எந்தச் சூழ்நிலையிலும் ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பேற்காது.
- தகுதியுடைய கார்டுதாரருக்கும், மற்றொரு விருந்தினருக்கும் விமான நிலையப் பயனருக்கும் அல்லது பங்கேற்கும் விமான நிலையத்திற்கும் லவுஞ்ச் ஆபரேட்டர் ஊழியர்கள்/பிரதிநிதிகளுக்கும்.இடையே, பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச் குறித்து அல்லது அதன் பயன்பாடு தொடர்பாக ஏற்படும் ஏதேனும் சர்ச்சைகளுக்கு ஆக்ஸிஸ் வங்கி எந்தச் சூழ்நிலையிலும் பொறுப்பேற்காது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பங்கேற்கின்ற விமான நிலைய லவுஞ்ச்சில் பங்கேற்பதன் மூலம் அல்லது பயன்படுத்துவதன் மூலம் அல்லது பயன்படுத்த முயற்சிப்பதன் மூலம், தகுதியுடைய கார்டுதாரர் பின்வருவனவற்றை ஒப்புக்கொள்கிறார்::
    - இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதற்கு, மற்றும்

- தகுதியுடைய கார்டுதாரர் மற்றும்/அல்லது அவருடன் வரும் விருந்தினர்களால் பங்கேற்பு விமான நிலைய லவுஞ்ச்சைப் பயன்படுத்துவதால் ஏதேனும் சொத்துக்கு ஏற்படுகின்ற சேதம் அல்லது இழப்பு அல்லது சேதாரம் அல்லது ஏதேனும் நபருக்கு ஏற்படுகின்ற காயம் அல்லது இறப்புக்கு இழப்பீடு கொடுப்பதற்கு எதிராக ஆக்ஸிஸ் வங்கிக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு.
- அனைத்து சர்ச்சைகளும், மேலே கூறப்பட்டுள்ள சலுகைகளின் விளைவாக அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதன் விளைவாக அல்லது வேறுவிதமாகத் தொடர்புடைய அனைத்து சர்ச்சைகளும், ஏதேனும் இருக்கும் பட்சத்தில், பிற பகுதிகளில் உள்ள நீதிமன்றங்கள்/ தீர்ப்பாயங்கள் நடப்பு அல்லது ஒத்த அதிகார வரம்பைக் கொண்டிருந்தாலும் கூட, மும்பையில் உள்ள தகுந்த நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் பிரத்யேக அதிகார வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவையாகும்..